தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 170 ★ 21.10.2026 ★தமிழ் நாளிதழ் ★புதன்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:170 ★21.10.2026 ★TamilDaily ★Wednesday ★Page-4 ★Price-₹5/- Chennai



பாரா ஆசிய விளையாட்டு டேபிள் டென்னிஸில் வெண்கலம்:

ஜெஹான் டொரப் மதனுக்கு முதல்வர் விஜய் வாழ்த்து

பாரா ஆசிய விளையாட்டு டேபிள் டென்னிஸ் விளையாட்டில் ஆண்கள் ஒற்றையர் கிளாஸ் 1 பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற ஜெஹான் டொரப் மதனுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள முதல்வர் விஜய், அரசு சார்பில் ரூ. 30 லட்சம் ஊக்கத்தொ கையும் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், "ஜப்பானில் நடைபெற்று வரும் 5வது பாரா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் டேபிள் டென்னிஸ் விளையாட்டில் ஆண்கள் ஒற்றையர் கிளாஸ் 1 பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்று மிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ள வீரர் ஜெஹான் டொரப் மதனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகள்.

அவரது சாதனையைப் பாராட்டும் வகையில், தமிழ்நாடு அரசு சார்பில் ரூ. 30 லட்சம் உயரிய ஊக்கத் தொகை வழங்கப்படும். தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் பாரா விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்கத்தையும், உத்வேகத்தையும் அளிக்கும் வகையில் இவ்வெற்றி அமைந்து ள்ளது.

வீரர் ஜெஹான் டொரப் மதன் வருங்காலங்களிலும் வெற்றிகளைப் பெற்று மேலும் பல உயரங்களை எட்ட வாழ்த்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.



ராமநாதபுரத்தில் ஒரு நாள் மழைக்கே சாலைகள், தெருக்களில் மழைநீர்

அமைச்சர் ராஜீவ் ஆய்வு

ராமநாதபுரத்தில் நேற்றிரவு பெய்த மழைக்கே சாலைகள், தெருக்களில் மழைநீர் குளம்போல் தேங்கி நின்றது. மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் அமைச்சர் நேரில் ஆய்வு செய்தார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்றிரவு பல இடங்களில் இடி, மின்னலுடன் மழை பெய்தது. ராமநாதபுரம் நகரில் பலத்த காற்றுடன் விடிய விடிய மழை பெய்தது. கடந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகபட்சமாக திருவாடனையில் 8 செ.மீ, ராமநாதபுரத்தில் 6.2 செ.மீ, தீர்த்தாண்டதா னத்தில் 5 செ.மீ, தொண்டியில் 4.9 செ.மீ மழை பதிவாகியுள்ளது.

இந்நிலையில் இன்று காலை 11 மணியளவில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் வி.கே.ராஜீவ், மழைநீர் தேங்கியுள்ள பாரதி நகர், நேரு நகர் தெருக்கள், பழைய பேருந்து நிலையம், அரண்மனை, கேணிக்கரை, செட்டிய தெரு, ஓம்சக்தி நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ளதை பார்வையிட்டார். அப்போது, மழைநீரை வெளியேற்றவும், சாலைகளை செப்பனிடவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

ஓம்சக்தி நகர் பகுதியில் பொதுமக்கள் சிலர் அமைச்சரிடம், இப்பகுதியில் பல தெருக்களில் இதுவரை சாலையே அமைக்கவில்லை. அதனால் மழைக்காலங்களில் மிகவும் கஷ்டப்படுகிறோம். சாலைகள் அமைத்துத்தர வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். அமைச்சரின் ஆய்வின்போது ஆட்சியர் சிவகுரு பிரபாகரன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

பின்னர் செய்தியா ளர்களிடம் பேசிய அமைச்சர் ராஜீவ், "ராமநாதபுரம் நகர் மற்றும் பட்டணம்காத்தான், சக்கரக்கோட்டை பகுதிகளில் மழைநீரை வெளியேற்றவும், பள்ளங்களை சரி செய்யவும், மழைநீர் கால்வாய்கள் மூலம் தண்ணீரை வெளியேற்றவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ராமநாதபுரம் நகராட்சியில் பாதாளச் சாக்கடை திட்டம் முறையாக குழாய்கள் அமைக்காததால் அந்த திட்டம் தோல்வியடைந்துள்ளது. அதனால் முறையாக குழாய்கள் அமைத்து கழிவுநீரை வெளியேற்ற திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது." என அமைச்சர் கூறினார்.

கனமழை காரணமாக சென்னை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் இன்று பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை



தென் மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனையொட்டிய தமிழ்நாடு கடற்கரை பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி இன்று உருவாக வாய்ப்பு உள்ளது என்றும், இதன் காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்காலில் வருகிற 26–ந் தேதி வரையில் (அதாவது இன்று முதல் 6 நாட்களுக்கு) கன முதல் மிக கனமழை வரை தொடரக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் அறிவித்திருக்கிறது.

இதுதவிர வருகிற 23–ந்தேதி வங்கக்கடலில் மேலும் ஒரு காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாவதற்கான வாய்ப்பு அதிகம் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இதனிடையே சென்னையில் இரவு முழுவதும் பல்வேறு பகுதிகளில் விட்டு விட்டு கனமழை பெய்தது. மேலும், கனமழை தொடர்வதற்கான வாய்ப்பு இருப்பதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, சென்னை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அளிக்கப்படுவதாக சென்னை மாவட்ட கலெக்டர் எஸ்.மாலதி ஹெலன் அறிவித்துள்ளார். அதே போல், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளுக்கும் இன்று விடுமுறை விடப்படுவதாக அந்த மாவட்டத்தின் கலெக்டர் கவிதா அறிவித்துள்ளார். மேலும் காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களிலும் இன்று கனமழை காரணமாக பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்படுவதாக அந்த மாவட்டங்களின் கலெக்டர்கள் அறிவித்துள்ளனர்.

"மாற்றம், மாற்றம் என கூறி ஆட்சிக்கு வந்து.." நா.த.க. வேட்பாளர் கைதுக்கு பிரேமலதா விஜயகாந்த் கண்டனம்



மாற்றம், மாற்றம் என கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் அரசியல் எதிர்ப்பு களை எதிர்கொள்ள கைது நடவடிக்கையை தீர்வாக கருதுவது எந்த வகையில் நியாயம்? என்று தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கேள்வி எழுப்பி உள்ளார்.

அதிகாலை 5,30 மணி

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு ள்ளதாவது:

தாராபுரம் இடைத்தேர்தலில் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்கார்த்திகாஅவர்களைஅதிகாலை 5,30 மணியளவில், அவர் இரவு உடையான நைட்டியின் இருந்த போது, உடை மாற்றிக்கொள்ள க்கூட அவகாசம் வழங்காமல் காவல்துறையினர் கைது செய்து, காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாணை நடத்தி வருவதாகக் கூறப்படும் சம்பளம் மிகுந்த கண்டனத்திற்குரியது.

தவறான முன்னு தாரணம்

தேர்தல் நோத்தில் தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தும் வகையில் சாலையில் இறங்கி மறியலில் ஈடுபட்டதற்காக ஒரு பெண்ணை அதிகாலை நேரத்தில் இத்தகைய முறையில் கைது செய்வதுதான் தீர்வா என்பதைத் தமிழக அரசும், ஆளுங்கட்சியி னரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு பெண் என்று கூடப்பாராமல், உடை மாற்றிக்கொள்ள அவகாசம் வழங்காமல் இரவு உடையிலேயே காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்துவது, பெண்களின் கண்ணிய த்தைக் கருத்தில் கொள்ளாத செயலாகும். இத்தகைய நடவடிக்கை கள் மக்கள் மத்தியில் தவறான முன்னுதார ணத்தை ஏற்படுத்தும்.

கைது நடவடிக்கை ஏன்..?

"மாற்றம், மாற்றம்' என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், அரசியல் எதிர்ப்புகளை எதிர்கொள்ளக் கைது நடவடிக்கைகளையே தீர்வாகக் கருதுவது எந்த வகையில் நியாயம்? பழிவாங்கும் நோக்கத்து டன் அரசு செயல்படுகிற தோ என்ற எண்ணம் மக்களிடையே ஏற்படும் வகையில் இத்தகைய சம்பவங்கள் அமைத்துள்ளன.

எனவே, தமிழக அரசு இந்தக்கைது நடவடிக்கையை உடனடியாக மறுபரிசீல னை செய்து, கார்த்திகா அவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு அதிகாரிகள், ஊழியர்கள் மீதான வன்கொடுமை வழக்கு

பட்டியலை தாக்கல் செய்ய ஐகோர்ட் உத்தரவு

தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் அரசு ஊழியர்கள், அதிகாரிகள் மீது சக ஊழியர்களால் அளிக்கப்பட்ட வன்கொடுமை புகார் மற்றும் வழக்குகளின் பட்டியலை தாக்கல் செய்ய உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெல்லை அண்ணாநகரைச் சேர்ந்த ஜோதிவேல் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல செய்த மனு: நான் மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளராக பணிபுரிந்தேன். இந்நிலையில் என்னை குவாச்சிப்பட்டி அரசு பள்ளி தலைமை ஆசிரியராக இடமாற்றம் செய்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் இடமாறுதல் செய்து உத்தரவிட்டார். இந்த உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டும். இவ்வாற மனுவில் கூறப்பட்டிருந்தது.

மனுவை நீதிபதி பி.புகழேந்தி விசாரித்தார். மனுதாரர் தரப்பில், 'இடமாறுதல் உத்தரவு தண்டனை வழங்கும் நோக்கம் கொண்டது. அதிகார வரம்பு இல்லாத முதன்மைக் கல்வி அலுவலரால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இடமாறுதல் உத்தரவை பள்ளி கல்வித் துறை இணை இயக்குநர் தான் பிறப்பிக்க வேண்டும்' எனக் கூறப்பட்டது.

அரசு தரப்பில், 'மனுதாரருக்கும் முதன்மை கல்வி அலுவலருக்கும் இடையே சுமூகமான உறவு இல்லை. மனுதாரர் தொடர்ந்து அதே பணியிடத்தில் நீடித்தால் கல்வி அலுவலரின் நிர்வாக பணிகளுக்கு இடையூறு ஏற்படும்' எனக் கூறப்பட்டது.

பின்னர் நீதிபதி, மனுதாரரின் இடமாற்ற உத்தரவு அதிகார வரம்பு இல்லாமல் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டிருப்பதால் இடமாறுதல் உத்தரவுக்கு தடை விதிக்கப்படுகிறது. மனுதாரர் பணியில் சேரலாம், அக். 26 வரை அவர் முதன்மைக் கல்வி அலுவலரின் தனி உதவியாளராக எந்தப் பணியையும் மேற்கொள்ளக் கூடாது. தன் மீது மனுதாரரின் புகாரின் பேரில் எஸ்சி, எஸ்டி வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் புகார் அளிக்கப்பட்டு வழக்கு பதிவு செய்ய வாய்ப்புள்ளதாக கல்வி அலுவலர் தரப்பில் அச்சம் தெரிவித்துள்ளதை கருத்தில் கொள்ள வேண்டியதுள்ளது. இதனால் வழக்கில் மனிதவள மேம்பாட்டு செயலாளரை நீதிமன்றம் தாமாக முன்வந்து எதிர்மனுதாரராக சேர்க்கிறது. அவர் கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசு அதிகாரிகள் தங்கள் அலுவலகத்தில் உள்ள உயர் அதிகாரிகள் அல்லது பிற பணியாளர்கள் மீது எஸ்சி, எஸ்டி வன்கொடுமைத் தடுப்பு சட்டம், 1989–ன் கீழ் எத்தனை புகார்களைப் பதிவு செய்துள்ளனர் என்பது குறித்த அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும். விசாரணை அக். 26–க்கு தள்ளிவைக்கப்படுகிறது என உத்தரவிட்டார்.

ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்த பெண்ணை கைது செய்வது.. கடைந்தெடுத்த பாசிசம் உதயநிதி

தாராபுரம் நா.த.க. வேட்பாளர் கார்த்திகா கைதை வன்மையாக கண்டிப்பதாக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல்

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது: தாராபுரம் இடைத்தேர்தலில் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் சகோதரி கார்த்திகாவை இந்த Circus அரசாங்கம் கைது செய்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன். தேர்தல் நேரத்தில் பதியப்பட்ட வழக்கின் அடிப்படையில், அரசியல் பழிவாங்கலோடும் த.வெ.க. வினரின் போதை ப்பொருள் கடத்தல் செய்திகளை திசைத்திருப்பவும் இந்தகைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடைந்தெடுத்த பாசிசம்

அரசியலில் விமர்சனங்களும் ஜனநாயக ரீதியான போராட்டங்களும் தவிர்க்க முடியாதவை. அதற்காக எதிர் வரிசையில் உள்ள ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்ணை கைது செய்வது என்பது கடைந்தெடுத்த பாசிசம். இந்த ரீல்ஸ் முதல்அமைச்சர், பா.ஜ.கவின் Carbon Copyஆக செயல்படாமல், சகோதரி கார்த்திகாவைவிடுவிக்கத்தேவையானநடவடிக்கையை செய்ய வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்பட்டியில் போலி இன்ஸ்டாகிராம் கணக்கு மூலம்

ஆயுதப் புகைப்படங்கள் பதிவேற்றம் 20 வயது இளைஞர் கைது; வாள் பறிமுதல்

திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், ரௌடி அலெக்ஸ் பாண்டியனின் இன்ஸ்டாகிராம் கணக்கு உருவாக்கி, அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் இருப்பது போன்ற புகைப்பட



புகைப்படங்களைப் பயன்படுத்தி போலி டங்களைப் பதிவிட்டு பொதுமக்களை அச்சுறுத்தியதாக மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பகுதியைச் சேர்ந்த ஸ்ரீரில்குமார் (20) என்பவரை போலீசார் கைது செய்தனர்.

திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். ஜெயக்குமார் உத்தரவின்பேரில், சைபர் கிரைம் போலீசார் உதவியுடன் மேற்கொண்ட விசாரணையில், போலி கணக்கை உருவாக்கியவர் அடையாளம் காணப்பட்டார். இதையடுத்து,

இன்று (அக். 20) கைது செய்யப்பட்ட அவரிடமிருந்து ஒரு வாளையும் போலீசார் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட வரை நீதிமன்றக் காவலுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சமூக வலைதளங்களில் போலி கணக்குகள் உருவாக்கி, பிறரது புகைப்படங்களைத் தவறாகப் பயன்படுத்தி அச்சுறுத்தும் வகையில் பதிவிடுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எச்சரித்துள்ளார்.



ரசிகர்களின் உயிரோடு விளையாடும் சேத்துப்பட்டு தியேட்டர்! கண்டுகொள்ளாத அதிகாரிகள்: பகல் கொள்ளைக்கு முடிவு எப்போது?

திண்டுக்கல் மாவட்டம் பழனி மலை அடிவாரம் கொடைக்கானல் பைபாஸ் சாலையில் அமைந்துள்ள ஆவின் பாலகத்தில் உள்ள பூங்காவில் குழந்தைகள் விளையாடும் சறுக்கல் உபகரணம் பராமரிப்பு இல்லாமல் பழுதடைந்து இருந்தது இது குறித்து பலமுறை நமது செய்தியாளர்கள் செய்தி பதிவிட்டும் இதை கண்டுகொள்ளாத நிர்வாகம் தற்பொழுது ஒரு சிறுவனின் சறுக்கல் விளையாடும் போது கால் விரல்கள் கிழிந்து மருத்துவமனையில் இரண்டு விரல்களில் கடுமையான காயம் ஏற்பட்டதால் தையல்கள் போடப்படும் அபாயம் நிலைக்கு செல்லப்பட்டது எனவே மேலும் பெரிய விபத்துக்கள் நடப்பதற்கு முன் உடனடியாக அந்த சருக்களே மற்றும் அங்கு விளையாட்டு உபகரணங்களை சரி செய்ய வேண்டுமென ஆவின் நிர்வாகத்துக்கு நமது தேசபக்தி தினசரி நாளிதழில் மூலமாக தெரிவித்துக் கொள்கிறோம்

நவராத்திரி விழாவை முன்னிட்டு

பஞ்சலிங்கேஸ்வரர் வண்ண மலர்கள் அலங்கரிக்கப்பட்டு பக்தர்களுக்கு அருள் பாலித்தார்

நவராத்திரி விழாவை முன்னிட்டு பஞ்சலிங்கேஸ்வரர் வண்ண மலர்கள் அலங்கரிக்கப்பட்டு பக்தர்களுக்கு அருள் பாலித்தார்,

இராணிப்பேட்டை மாவட்டத்தின் கிழக்கு பகுதியிலும், காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் வேலூர் மார்கவும் ஒட்டி, அமைந்துள்ளது பஞ்சலிங்கேஸ்வரர் கோயில். இக்கோயிலில் பஞ்சபூதத் தலமாகவும், காமாட்சி அம்மன் வழிபட்ட தலமாகவும் சிறப்பிக்க ப்படுகிறது. மேலும் இக்கோவிலில் 12–ராசிக்காரர்களும் வழிப்பட வேண்டிய தளமாக விளங்குகிறது. இந்நிலையில் இக்கோயிலில் நவராத்திரி விழா மற்றும் ஆயுதபூஜை விழா முன்னிட்டு, நந்தி பகவான் மற்றும் பஞ்சலிங்கே ஸ்வரருக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் ஆதாரனை நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து பஞ்சலிங்கேஸ்வரர் மற்றும் நந்தி பகவானுக்கு வண்ண மலர்களால் அலங்கப்பட்டு பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்.

இதனைத் தொடர்ந்து இக்கோயிலில் வளாகத்தில் உற்சவர் வீதியுலா நிகழ்ச்சி நடைபெற்றது.



இதனையடுத்து பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை விழா குழுவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

ஆயுத பூஜையை முன்னிட்டு 2 பயனாளிகளுக்கு இலவசமாக புதிய ஆட்டோ வழங்கிய மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம். எல்.விஜய்பிரபு



மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம்.எல். விஜய் பிரபு அலுவலகத்தில் ஆயுத பூஜை விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஆயுத பூஜை நிகழ்ச்சியில், சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒரு பெண், ஒரு ஆண் ஆகிய இருவருக்கு அவர்களும் அவர்கள் குடும்பமும் வாழ்வதற்காக இரண்டு புதிய ஆட்டோக்களை மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய்பிரபு இலவசமாக வழங்கினார்.

ஆட்டோவைப் பெற்றுக் கொண்ட இருவரும், சொந்தமாக ஆட்டோ வாங்க முடியாமல் வாடகை ஆட்டோ ஓட்டி, பொருளாதார சிரமங்களை அனுபவித்து வந்த நாங்கள் இந்த ஆட்டோக்களின் மூலம் சுயமாக சம்பாதிக்கவும், வருமானம் ஈட்டிக் கொள்ள வேம் எங்களால் முடியும் என்று தன்னம்பிக்கையுடன் கூறினர். ஆட்டோவைப் பெற்றுக் கொண்ட பெண் பயனானி, தனது கணவர் உடல் நிலை குன்றிய நிலையில் தங்கள் குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்காக ஆட்டோ வழங்கிய தமிழக முதல்வருக்கும் மாதவரம் சட்ட மன்ற உறுப்பினருக்கும் நன்றி தெரிவிப்பதோடு அவர்களுக்காக மனமுருகி இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம் என்றனர்.

விஜயதசமியை முன்னிட்டு

பெருவாயல் டி.ஜெ.எஸ். மெட்ரிக். மேல்நிலைப்பள்ளியில் புதிய மாணவர் சேர்க்கை

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி ஒன்றியம் அருகே பெருவாயல் டி.ஜெ. எஸ். மெட்ரிக். மேல் நிலைப் பள்ளியில் விஜயதசமியை முன்னிட்டு புதிய மாணவர் சேர்க்கை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு டி.ஜெ. எஸ். கல்விக் குழுமத்தின் தலைவரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு பெற்றோருகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் புதிதாக மழலையர் பிரிவில் (LKG) சேர்ந்த மாணவர்களுக்கு



மாலை அணிவித்து அரிசியில் எழுத வைத்து ஆசியும் வழங்கினார். பள்ளியின் தாளாளர் டாக்டர் ஏ.பழனி மாணவர்களுக்கு நல்லாசியும் வழங்கினார்.

அவர்களைத் தொடர்ந்து டி.ஜெ.எஸ். பப்ளிக் பள்ளியின் தாளாளரும் கல்விக் குழுமத்தின் இயக்குநருமான டி.ஜெ. ஜி. தமிழரசன் சிறப்புரை ஆற்றினார். பள்ளியின் முதல்வர் பா. ஞானபிரகாசம் வரவேற்புரை ஆற்றினார்.

மேலும் பெற்றோரை சிறப்பிக்கும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இறுதியாக பள்ளியின் தலைமை ஆசிரியர் ரவி நன்றியுரை வழங்கினார்.

விஜயதசமியை முன்னிட்டு

ஆற்காடு தெற்குத் தெரு அங்கன்வாடி மையத்தில் மாணவர் சேர்க்கை

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு தெற்குத் தெரு பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் ஆயுத பூஜை மற்றும் விஜயதசமியை முன்னிட்டு சிறப்புப் பூஜை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, விஜயதசமி நாளை முன்னிட்டு அங்கன்வாடி மையத்தில் புதிய மாணவர் சேர்க்கை நடைபெற்றது.

இதில் அங்கன்வாடி பணியாளர் ஏ.எஸ். சுல்தானா, புதிதாகச் சேர்ந்த குழந்தைகளின் கைகளைப் பிடித்து அரிசியில் தமிழ் எழுத்துக்களின் முதல் எழுத்தான 'அ' என்ற எழுத்தை எழுத வைத்து, அவர்களின் கல்விப் பயணத்தைத் தொடங்கி வைத்தார். பின்னர், புதிதாகச் சேர்ந்த



மாணவர்களுக்குப் பலகை, சீருடை மற்றும் இனிப்புகள் வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் அங்கன்வாடி உதவியாளர் ஜானகி மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

எண்ணூரில் தீபாவளி சீட்டு நடத்தி ரூ.43 லட்சம் மோசடி; போலீசார் விசாரணை

எண்ணூரில் தீபாவளி சீட்டு நடத்தி சுமார் ரூ.43 லட்சம் மோசடி செய்துவிட்டு குடும்பத்துடன் தலைமறைவானவரை போலீசார் தேடிவருகின்றனர்.

சென்னை எண்ணூர், வ.உ.சி. நகரைச் சேர்ந்தவர் ஞானப்பிரகாசம். இவரது மனைவி கல்யாணி. இவர் அதேபகுதியைச் சேர்ந்தவினோத்குமார் என்பவரிடம் தீபாவளி சீட்டுக்காக பணம் செலுத்தி வந்தார். மேலும், தனது உறவினர்கள் மற்றும் நண்பர்களையும் அந்த சீட்டில் சேர்த்துள்ளார்.

தற்போது தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் நிலையில், சீட்டுக்கான பணம் மற்றும் பொருட்கள் கிடைக்கும் என்று கல்யாணி காத்திருந்தார். ஆனால், அவருக்கு பணமும் பொருட்களும் கிடைக்கவில்லை. இதையடுத்து, வினோத்குமாரிடம் கேட்டறிவதற்காக அவரது வீட்டுக்குச் சென்றார். அப்போது வீடு பூட்டப்பட்டிருந்தது. வினோத் குமார் தனது குடும்பத்துடன் தலைமறைவானது தெரியவந்தது.

இதனால் அதிர்ச்சியடைந்த கல்யாணி, இதுகுறித்து எண்ணூர் போலீசில் புகார் அளித்தார். போலீசார் நடத்திய விசாரணையில், வினோத் குமார் தீபாவளி சீட்டு நடத்தி சுமார் ரூ.43 லட்சம் வரை மோசடி செய்திருப்பது தெரியவந்தது. இதையடுத்து, தலைமறைவாக உள்ள வினோத் குமாரை போலீசார் தேடி வருகின்றனர். இதற்கிடையே, அவரிடம் தீபாவளி சீட்டுக்காக பணம் செலுத்தியவர்கள் இந்த மோசடி குறித்து அறிந்து அதிர்ச்சியடைந்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களும் போலீசில் புகார் அளித்து வருகின்றனர்.

சில்ரன்ஸ் பேரடைஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் புதிய மாணவர் சேர்க்கை

மாதவரம் தொகுதி செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர் ஊராட்சி எம்.ஏ. நகரில் இயங்கிவரும் சில்ரன்ஸ் பேரடைஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் விஜயதசமியை முன்னிட்டு வித்யாரம்பம் நிகழ்ச்சியும் புதிய மழலையர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி பள்ளி தாளாளர் என்.ராஜன் தலைமையில் நடைபெற்றது.

பள்ளியின் முதல்வர் விஜயா முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வில் புதிதாய் சேர்ந்த மழலையர்கள் நெல்மணிகளில் "அ"கரம் எழுத வைத்து அ முதல் ஃ வரை சொல்ல வைத்தனர். புதிதாய் பள்ளியில் சேர்ந்த மழலையர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

நவராத்திரி திருவிழாவை முன்னிட்டு தொடர்ந்து 9 நாள்களும் பள்ளி வளாகத்தில் கொலு வைத்து வழிபட்டனர். இதில் மழலையர்கள், மாணவ – மாணவிகள், பெற்றோர்கள், ஆசிரிய – ஆசிரியைகள் கலந்துகொண்டனர்.





பாடியநல்லூர் ஆப்பிள் கிரிச் பிளே ஸ்கூலில் வித்யாரம்பம் நிகழ்ச்சி

விஜயதசமி தினத்தன்று குழந்தைகளை முதன் பெற்றோர்கள் தங்கள் முதலாக பள்ளியில்



சேர்ப்பது தொன்று தொட்டு நடைமுறையில் இருந்து வருகின்ற வழக்கமாகும்.

செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர் எம்.ஏ. நகரில் அமைந்துள்ள ஆப்பிள் கிரிச் பிளே ஸ்கூலில் வித்யாரம்பம் நிகழ்ச்சியும் புதிய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சியும் பள்ளி நிறுவனர் டாக்டர் ராஜேஸ்வரி ரஞ்சித் தலைமையில் நடைபெற்றது. பள்ளியின் முதன்மை நிர்வாக அதிகாரி ரஞ்சித் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வில் புதிதாய் சேர்ந்த மாணவர்கள் நெல்மணிகளில் "அ"கரம் எழுத வைத்து அ , ஆ சொல்ல வைத்தனர். புதிதாய் பள்ளியில் சேர்ந்த மாணவர்கள் கல்வி உபகரணங்களை பெற்றுக் கொண்டு மனமகிழ்ச்சியுடன் சென்றனர். இதில் மாணவ – மாணவிகள், பெற்றோர்கள், ஆசிரிய – ஆசிரியைகள் கலந்துகொண்டனர்.

தாமிரபரணி ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருங்கள்

தூத்துக்குடி கலெக்டர் எச்சரிக்கை

தாமிரபரணி ஆற்றங்கரையோரம் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் விஷ்ணு மகாஜன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

20, 21–ம் தேதிகளில் ஆரஞ்சு எச்சரிக்கை

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்டம் மற்றும் தாமிரபரணி ஆற்றின் நீர்பிடிப்பு மாவட்டங்களான திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களுக்கு இந்திய வானிலை ஆய்வுத்துறையின் சென்னை மண்டல மையத்தால் ***20.10.2026*** முதல் ***21.10.2026*** வரை மிக கனமழை பெய்யும் என ஆரஞ்சு நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், மாவட்டத்தின் பல பகுதிகளில் பரவலாக கனமழை பெய்து வருகிறது.

தாமிரபரணி ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருங்கள்

எனவே, தூத்துக்குடி மாவட்டம் மருதூர் மற்றும் திருவைகுண்டம் அணைக்கட்டு பகுதிகள், கலியாவூர் முதல் புன்னக்காயல் வரை தாமிரபரணி ஆற்றங்கரையோர கிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள், கோரம்பள்ளம் ஆறு ஓடை, உப்பாத்து ஓடை மற்றும் அனைத்து நீர்நிலைகளையும் உன்னிப்பாக கண்காணித்து உரிய நடவடிக்கை உடனுக்குடன்



மேற்கொள்ளவும், நகர பகுதிகளில் தேங்கும் மழை நீரை உடனுக்குடன் அகற்றிடவும், அனைத்து துறை அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வெள்ள பாதிப்புகள் தொடர்பாகவும் மற்றும் உதவிகள் தேவைப்படும் பொது மக்கள் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுப்பாட்டு அறைக்கு கட்டணமில்லா தொலைபேசி எண் ***1077***, கைபேசி எண் – ***7092300044***–ஐ தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மற்றும் அணைக்கட்டு பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் ஆற்றில் குளிக்கவோ, ஆற்றின் கரையோர பகுதிகளுக்கோ செல்லாமல் பாதுகாப்பாக இருக்கும் படியும், மாவட்டத்தின் மழை நீர் தேங்கக்கூடிய இதர தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களும் பாதுகாப்பாக இருக்கும் படியும் எச்சரிக்கப்படுகிறார்கள்.

வெள்ள பாதிப்புகள்; தொடர்பு எண்கள்

மேலும் மருதூர் அணைக்கட்டு, திருவைகுண்டம் அணைக்கட்டு, கோரம்பள்ளம் அணைக்கட்டு, உப்பாறு





குரங்கணி மலை கிராமம் அருகே

முதுவார்குடி பழங்குடியின மக்களுக்கு இலவச மருத்துவ முகாம்

தேனி மாவட்டம் போடி அருகே மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் உள்ள போடி ஊராட்சி ஒன்றியம் குரங்கணி மலை கிராமம் அருகேஉள்ள முதுவார்குடி பழங்குடியினர் மலை கிராமத்தில் 28 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின்பேரில், காவல் ஆய்வாளர் ஆறுமுகம் தலைமையில் தேனி சிறப்பு இலக்கு படை நுண்ணறிவு பிரிவு சார்பாக அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவதுடன் இலவச மருத்துவ முகாமும் நடைபெற்றது.இதில் தேனி அரசு மருத்துவக் கல்லூரி பேராசிரியர் மருத்துவர் சரவணன் மற்றும் ம.சுப்புலாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய தேசிய குழந்தைகள் நலத்திட்ட மருந்தாளுநர் ரஞ்சித்குமார், தலைமை மருந்தாளுநர் செல்வராஜ் ஆகியோர் பங்கேற்றனர். இந்த மருத்துவ முகாமில் திரளான கிராம மக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். மேலும் அப்பகுதி வாழ் பொதுமக்களிடம் கண்டறியப்பட்ட நோயினை சரிசெய்யும் விதமாக மேல் சிகிச்சைக்காக தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மயக்கவியல் துறை உதவிப் பேராசிரியர் மருத்துவர் பெரியசாமி மருந்து மாத்திரைகள் வழங்கினார். தொடர்ந்து முகாமில் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு மற்றும் வனப்பகுதியில் நெகிழிப் பையை பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்தும் பாலித்தீன் பைகளுக்கு பதிலாக துணி பைகள் பயன்படுத்த வேண்டும் என்று விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மலை கிராம பழங்குடி மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டது.

விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் வித்யாரம்பம் நிகழ்ச்சி


செங்குன்றம் அடுத்த நல்லூர் சோலையம்மன் நகரில் அமைந்துள்ள விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் விஜயதசமியை முன்னிட்டு வித்யாரம்பம் நிகழ்ச்சியும் புதிய மழலையர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சியும் பள்ளி தாளாளர் மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.



பள்ளி செயலாளர் ஜெயலட்சுமி, முதல்வர் செல்வக்குமார், முதன்மை நிர்வாக அதிகாரி அருண்மொழிவர்மன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் புதிதாய் சேர்ந்த மழலையர்கள் நெல்மணிகளில் "அ"கரம் எழுத வைத்து அ , ஆ சொல்ல வைத்தனர். புதிதாய் பள்ளியில் சேர்ந்த மழலையர்களுக்கு கல்வி உபகரணங்களை பெற்றுக் கொண்டு மனமகிழ்ச்சியுடன் சென்றனர். இதில் மழலையர்கள், பெற்றோர்கள், ஆசிரிய – ஆசிரியைகள் கலந்துகொண்டனர்.

திருவண்ணாமலை எஸ்.கே.பி. வனிதா பள்ளியில் குழந்தைகளின் கல்விப் பயணத்தைத் தொடங்கிய 'முதல் எழுத்து' விழா







திருவண்ணாமலை எஸ்.கே.பி. வனிதா பன்னாட்டுப் பள்ளி மற்றும் எஸ்.கே.பி. வனிதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி இணைந்து நடத்திய விஜயதசமி விழாவில், மழலைக் குழந்தைகளின் கல்விப் பயணத்தைத் தொடங்கும் 'முதல் எழுத்து' நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

எஸ்.கே.பி. கல்விக் குழுமத் தலைவர் கு. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற விழாவில், கல்விக் குழும இணைச்செயலாளர் கே.வி. அரங்கசாமி, முதன்மை நிர்வாக அதிகாரி ஆர். சக்தி கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி துணைப் பேராசிரியரும், தனபாக்கியம் சிறப்பு மருத்துவமனையின் நிர்வாக இயக்குநருமான ஜி. வெங்கடேஷ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

விழாவின் தொடக்கத்தில் இறைவணக்கப் பாடல் பாடப்பட்டது. தொடர்ந்து, பள்ளி மாணவியின் வரவேற்பு நடனம் பார்வையாளர்களைக் கவர்ந்தது. சிறப்பு விருந்தினர், பள்ளி முதல்வர்கள் மற்றும் பெற்றோர்கள் குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்தனர். எஸ்.கே.பி. வனிதா பன்னாட்டுப் பள்ளி முதல்வர் இந்திரலீலா வரவேற்புரையாற்றினார்.

விஜயதசமியின் நன்னாளில் குழந்தைகளின் கல்விப் பயணத்தை இனிதே தொடங்கும் வகையில் நடைபெற்ற 'முதல் எழுத்து' நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினர் மற்றும் பள்ளி முதல்வர்கள் குழந்தைகளின் பிஞ்சு விரல்களைப் பிடித்து, நெல் மணிகள் மீது தமிழ் மொழியின் முதல் எழுத்தான 'அ' எழுத்தை எழுதச் செய்தனர். இந்நிகழ்வு குழந்தைகளுக்கு எழுத்தறிவின் மீதான ஆர்வத்தை ஏற்படுத்துவதோடு, தமிழ்மொழி மற்றும் அதன் பண்பாட்டின் மீதான பற்றையும் வளர்க்கும் வகையில் அமைந்தது.

தொடர்ந்து பேசிய சிறப்பு விருந்தினர் ஜி. வெங்கடேஷ், குழந்தைகளின் வளர்ச்சியில் வாசிப்புப் பழக்கத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். "தெளிவான எழுத்து என்பது தெளிவான சிந்தனையின் வெளிப்பாடு; தெளிவான சிந்தனைக்குத் தெளிவான வாசிப்பு அவசியம்" என்று வலியுறுத்தினார். மேலும், இசையும் பாடல்களும் ஆன்மாவின் மொழியாகத் திகழ்கின்றன என்றும் குறிப்பிட்டார்.

இதையடுத்து, சரஸ்வதி தேவிக்கு சிறப்புப் பூஜை செய்து வழிபாடு நடத்தப்பட்டது. குழந்தைகளின் கற்றல் பயணத்திற்கு அடித்தளமிடும் வகையில் நடைபெற்ற இந்த விழா, பெற்றோர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

விழாவில் எஸ்.கே.பி. வனிதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வர் Y. ரெஜினா பெலிஷியா நன்றியுரை யாற்றினார். மக்கள் தொடர்பு அலுவலர் சையத் ஜஹிருத்தீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலையில் 34 ஆட்டோ நிலையங்களில் ஆயுதபூஜை விழா:

1,000 ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்கிய சி.என்.அண்ணாதுரை எம்.பி.



திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில், *34* ஆட்டோ ஓட்டுநர் நிலையங்களில் ஆயுதபூஜை விழா நடைபெற்றது. இதையொட்டி, *1,000* ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடைகள் மற்றும் சிறுசேமிப்பு நிதி உள்ளிட்ட நல உதவிகள் வழங்கப்பட்டன.

கடந்த ***19.10.2026*** அன்று நடைபெற்ற விழாவுக்கு, தமிழ்நாடு அனைத்து அமைப்பு சாரா தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் மாநிலப் பிரச்சாரச் செயலாளர் ஏ.ஏ.ஆறுமுகம் தலைமை தாங்கினார்.

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாவட்ட அமைப்பாளர் பவர் அன்பரசு, மாவட்டத் தலைவர் மெட்ராஸ் சுப்பிரமணி, மாவட்டத் துணைத் தலைவர் ஏ.டபிள்யு.ஷாஜகான், மாவட்டத் துணை அமைப்பாளர்கள் பு.பாலசந்தர், இரா. அர்ஜுனன், ஆர்.கே. முத்துகுமார், இரா. அன்பரசு, பி.ஜெயபிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருவண்ணாமலை மாநகர திமுக செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் விழாவைத் தொடங்கி வைத்தார்.

திருவண்ணாமலை நகராட்சி திடல் அருகே உள்ள ஈசான்ய மைதானத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் ஆட்டோ ஓட்டுநர் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ஓட்டுநர்களுக்கு சீருடைகள், சிறுசேமிப்பு ரொக்கத் தொகை, பழங்கள், இனிப்புகள், காரவகைகள் மற்றும் பொரிகடலை ஆகியவற்றை வழங்கினார்.

அப்போது அவர் பேசுகையில், திருவண்ணாமலை நகரில் *3,500*–க்கும் மேற்பட்ட ஆட்டோக்கள் இயங்கி வருவதாகக் குறிப்பிட்டார். அண்ணாமலையார் கோவில், சேஷாத்திரி ஆசிரமம், ஸ்ரீரமணாசிரமம், யோகி ராம்சுரத்குமார் ஆசிரமம் மற்றும் கிரிவலப் பாதைக்கு வெளியூர்களிலிருந்தும் வெளிநாடு களிலிருந்தும் வரும் ஆன்மிகப் பயணிகள், பக்தர்கள் மற்றும் பொதுமக்களை நம்பியே பல ஆட்டோ ஓட்டுநர்கள் வாழ்வாதாரத்தை நடத்தி வருவதாகத் தெரிவித்தார். அவர்கள் ஈட்டும் வருமானத்தின் மூலம் குடும்பத்தைப் பராமரிப்பதுடன், குழந்தைகளின் கல்விச் செலவு களையும் மேற்கொள்வது மகிழ்ச்சியளிப்பதாகக் கூறினார்.

மேலும், தந்தை பெரியார் ஆட்டோ ஓட்டுநர் சங்க உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் சிறுசேமிப்பில் ஈடுபட்டு வருவதைப் பாராட்டினார். ஆயுதபூஜையை முன்னிட்டு, *290* ஓட்டுநர்களுக்கு தலா ரூ.*5,200* வீதம் சேமிப்புத் தொகை பகிர்ந்தளிக்கப்படுவது அவர்களின் ஒற்றுமைக்கும் சேமிப்புப் பழக்கத்திற்கும் எடுத்துக்காட்டாக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

ஆட்டோ ஓட்டுநர்கள் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாமல், விதிமீறல்களுக்கு இடமளிக்காமல் செயல்படுவதுடன், திருவண்ணாமலைக்கு வருகை தரும் பக்தர்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்வதிலும் முக்கியப் பங்காற்றுவதாக அவர் தெரிவித்தார்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தளபதி மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின், டாக்டர் அம்பேத்கர், டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் உள்ளிட்டோரின் பெயர்களில் இயங்கும் ஆட்டோ ஓட்டுநர் நிலையங்கள் உட்பட மொத்தம் *34* நிலையங்களில் ஆயுதபூஜை விழா நடைபெற்றது.

விழாவில் மாநகரத் துணை மேயர் சு.ராஜாங்கம், இளைஞரணி மாவட்டத் துணை அமைப்பாளரும் வழக்கறிஞருமான சீ.கண்ணதாசன், தந்தை பெரியார் ஆட்டோ ஓட்டுநர் சங்க நிர்வாகிகள் டி. நம்பியார், என்.சுதாகர், கே.சுரேஷ், சி.அங்கப்பன், சி.முருகன், வி.ரவி உள்ளிட்ட நிர்வாகிகளும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

வைகை ஆற்றில் கார் பார்க்கிங்: பொதுமக்கள் அதிர்ச்சி; நடவடிக்கை எடுக்க கோரிக்கை


மதுரையில் வைகை ஆறு, கார் பார்க்கிங்காக மாறியுள்ளது மக்களிடையே அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது.

மதுரையில் வைகை ஆற்றில், கார்கள் நிறுத்தப்பட்டு, கார் பார்க்கிங்காக மாறியுள்ளது. இதனால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இதுபற்றி நேற்று புகார் எழுந்ததும் கார்கள் வெளியே ற்றப்பட்டன. இந்த நிலையில், இன்றும் கார்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இதுதொடர்பான புகைப்படங்கள் வெளியாகி உள்ளன.

இரு சமயங்கள்

தமிழகத்தின் பழமை வாய்ந்த விழாக்களில் ஒன்று, அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம். லட்சக்கணக்கான பக்தர்கள் கண்டு மகிழும் இந்த திருநாள், மதுரையில் பழம் பெருமையை விளக்கும் விழாவாகும். சைவம், வைணவம் என இரு சமயங்கள் தொடர்புடைய விழாவாகவும் அழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்வு பார்க்கப்படுகிறது.

ஷாப்பிங்



இந்த நிலையில், வைகை ஆறு, கார் பார்க்கிங்காக மாறியுள்ளது மக்களிடையே அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது. மதுரையின் முக்கிய வீதிகள், சாலைகளில் உள்ள வணிக நிறுவனங்களுக்கு ஷாப்பிங் செய்வோர், வியாபாரரீதியாக வந்து செல்வோர் தங்களுடைய கார்களை வைகை ஆற்றில் பார்க்கிங் செய்து செல்கின்றனர்.

அவர்கள், பல மணி நேரம் கார்களை நிறுத்தி விட்டு மீண்டும் வந்து அவற்றை எடுத்து செல்கின்றனர். இந்த விசயத்தில், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பழனியில்

மனைவியை கத்தியால் குத்திய கணவன் கைது

திண்டுக்கல் மாவட்டம் பழனி பேருந்து நிலையம் அருகே வையாபுரி குளம் ரவுண்டானா பகுதியில் மனைவி பகவதி *(28)* சரமாரியாக கத்தியால் குத்திய கணவன் பிரவீன் குமார் தகவல் அறிந்த பழனி நகர காவல் நிலைய ஆய்வாளர் தங்க முனியசாமி சார்பு ஆய்வாளர் சந்திரன் மற்றும் காவலர்கள் மனைவி பகவதியை மீட்டு சிகிச்சைக்காக பழனி தலைமை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் கணவன் பிரவீன் குமாரை கைது செய்து விசாரணை மேற்கண்ட போது மனைவியின் நடத்தையில் சந்தேகம் காரணமாக கத்தியால் குத்தியதா க முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அலட்சியத்தால் தொடரும் கொலைகள், போதை உற்பத்தி மையமாகும் தமிழ்நாடு, தள்ளாடும் காவல்துறை மு.க. ஸ்டாலின்

அலட்சியத்தால் தொடரும் கொலைகள், போதை உற்பத்தி மையமாகும் தமிழ்நாடு, தள்ளாடும் காவல்துறை என்று மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். இது தொடர்பாக, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்ததாவது:–

கொலை சம்பவம்

சில நாட்களுக்கு முன்புதான், திண்டுக்கல் மாவட்டத்தில் காவல் நிலையத்தில் ஜாமின் கையெழுத்து போட்டுவிட்டு வந்தவர் மனைவி முன்பே கொடூரமாக கொலை செய்யப்பட்டார். அப்போதே, "ஜாமினில் வெளிவரும் குற்றவாளிகள் கண்காணிக்கப்படுகிறார்களா இல்லையா?" என நான் கேள்வி எழுப்பியிருந்தேன். அப்படி உருப்படியான எதுவும் செய்யப்படுவதில்லை



என சிவகங்கையில் நேற்று நடந்துள்ள மற்றுமொரு கொலை சம்பவம் காட்டியுள்ளது.

காவல்துறையின் அலட்சியம்

கொலை வழக்கில் கைதாகி, ஜாமினில் வெளிவந்த மதன் எனும் ரவுடி ஓட ஓட விரட்டி கொலை செய்யப்பட்டுள்ளார். முழுக்க முழுக்க காவல்துறையின் அலட்சியத்தால் நடந்துள்ள கொலை இது.

பாலியல் வன்கொடுமை

பெருந்துறை அருகே செவிலியர் கடத்தப்பட்டு, பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். 5 நாட்களுக்குப் பின்புதான் அவரது சடலத்தையே கண்டறிந்திருக்கிறார்கள். நடப்பது நம் ஆட்சிதானே என நினைத்து த.வெ.க. நிர்வாகிகளின் போதை பொருள் கடத்தலும் கொடிகட்டி பறக்கிறது.

த.வெ.க. நிர்வாகி 'மெத்' பூபாலன்

வேதாரண்யத்தில் த.வெ.க. ஒன்றிய செயலாளர் கஞ்சா கடத்திய வழக்கில் கைது செய்யப்பட்டார். இப்போது, அதே மாவட்டத்தில் உலகத்துக்கே மெத் தயாரித்து விற்பனை செய்யும் மையமாக தமிழ்நாட்டை மாற்ற முயன்ற த.வெ.க. நிர்வாகி 'மெத்' பூபாலனும் கைதாகியுள்ளார்.

கண்டும் காணாமல் விட்டனரா?

முதல்–அமைச்சரின் திரைப்படங்களை பார்த்து இதைத்தான் அவரது கட்சிக்காரர்கள் கற்றுக்கொள்கிறார்களா? மாநில காவல்துறையினரால் இவர்களை பிடிக்க முடிய வில்லையா அல்லது ஆளும்கட்சி நபர் என்பதால் இத்தனை நாள் கண்டும் காணாமல் விட்டனரா?

நடப்பது என்ன?

போதை மருந்துகளை கட்டுப்படுத்த வேண்டுமென்றால், முதலில் தன் கட்சியினரை முதல்–அமைச்சர் கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும். அதற்கு, காவல்துறை முதலில் அவரது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். ஆனால் நடப்பது என்ன?

வெளிக்கொள்முதல்

துறைக்கு பெயரளவில் மட்டுமே முதல்–அமைச்சர் பொறுப்பு வகிக்கிறார். தன்னிடமுள்ள பல துறைகளின் பொறுப்புகளை மற்ற அமைச்சர்களுக்கு பிரித்து கொடுத்ததை போல, காவல்துறையையும் வெளிக்கொள்முதல் (outsource) செய்துவிட்டாரா?

போதையை விடு, விளையாட்டை எடு

காவல்துறையில் அவர் உரிய கவனம் செலுத்துவதில்லை என்பதைத்தான் நிற்காமல் தொடரும் அரிவாள்வெட்டுகளும், மத்திய அரசின் விசாரணை அமைப்புகளிடம் பிடிபடும் போதைக்க டத்தல்களும் காண்பிக்கின்றன. முதல்–அமைச்சர் அவர்களே, உங்கள் அலட்சியம் உயிர்களை பறிக்கிறது. போதையை விடு, விளையாட்டை எடு என்று சொன்ன நீங்கள் முதலில் ஓய்வெடுப்பதை விட்டுவிட்டு, உங்கள் துறையைக் கையில் எடுங்கள்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



"கம்பம் தொகுதியில் குற்றங்களை தடுக்க ரூ.25 லட்சம் சொந்த நிதியில் 2,000 சிசிடிவி கேமராக்கள்"

எம்.எல்.ஏ. பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா முதற்கட்டப் பணியை தொடங்கி வைத்தார்

"கம்பம் தொகுதியில் குற்றங்களை தடுக்க ரூ.25 லட்சம் சொந்த நிதியில் 2,000 சிசிடிவி கேமராக்கள்" எம்.எல்.ஏ. பி.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா முதற்கட்டப் பணியை தொடங்கி வைத்தார்.

தேனி மாவட்டம் கம்பம் சட்டமன்றத் தொகுதி மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்ற சம்பவங்களை தடுக்கும் வகையிலும் தொகுதி முழுவதும் 2,000–க்கும் மேற்பட்ட நவீன கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்தும் முதற்கட்டப் பணியை கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ.ஜெக நாத் மிஸ்ரா தொடங்கி வைத்தார். கம்பம் எம். எல்.ஏ. அலுவலகம் அமைந்துள்ள ரவுண்டானா பகுதியில் நடைபெற்ற நிகழ்வில், அவர் குத்துவிளக்கேற்றி கேமரா பொருத்தும் பணியை முறைப்படி தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியா ளர்களிடம் பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா பேசுகையில், "கம்பம் தொகுதி முழுவதும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும் என ஏற்கனவே அறிவித்தி ருந்தேன். அந்த வாக்குறு தியின்படி, தற்போது முதற்கட்டமாக எனது சொந்த நிதியிலிருந்து ரூ.25 லட்சம் செலவில் இப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தொகுதி முழுவதும் கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், ஓடைப்பட்டி, தேவாரம் என ஐந்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டு 2,000–க்கும் மேற்பட்ட கேமராக்கள் பொருத்த திட்டமிடப்பட்டுள்ளது. வணிக நிறுவனங்கள், தன்னார்வ அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஓய்வுபெற்ற அரசு அலுவலர்கள் தங்கள் பகுதிகளில் சிசிடிவி அமைப்பதற்கு நிதியுதவி வழங்கி பாதுகாப்பை மேலும் பலப்படுத்த முன்வர வேண்டும். கேமராக்கள் முழுமையாக பொருத்த ப்பட்ட பிறகு, சம்பந்தப்ப ட்ட காவல் நிலைய ங்களில் அமைக்க ப்படும் கண்காணிப்பு மானிட்டர்கள் மூலம் காட்சிகள் நேரடியாக கண்காணிக்கப்படும். இதன் மூலம் திருட்டு, வழிப்பறி மற்றும் சமூக விரோத செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டு மக்களுக்கு முழு பாதுகாப்பு அளிக்கப்படும்" என்று கூறினார். இந்நி கழ்வில் தேனி தென்மேற்கு மாவட்ட கழக இணைச் செயலாளர் கூடல் செல்வேந்திரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் அய்யர் மற்றும் நகர, ஒன்றியக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

"வாக்குத் திருட்டு என்ற ஒன்று கிடையவே கிடையாது" - வானதி சீனிவாசன்

"வாக்குத் திருட்டு என்று ஒன்று கிடையவே கிடையாது. இது ஒரு தவறான, தீய நோக்கத்துடன் கூடிய பிம்பத்தை உருவாக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாடல் மட்டுமே" என பாஜகவை சேர்ந்த வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "வாக்குத் திருட்டு என்று ஒன்று கிடையவே கிடையாது. இது ஒரு தவறான, தீய நோக்கத்துடன் கூடிய பிம்பத்தை உருவாக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாடல் மட்டுமே. இதைப் புரிந்துகொள்ள, வாக்காளர் பட்டியல் தயாரிப்பு முதல் வாக்குப்பதிவு, வாக்குஎண்ணிக்கைவரையிலான முழுசெயல்முறையையும் அறிந்து கொள்வது அவசியம்.

எஸ்ஐஆர் முறையில் வாக்காளர் பட்டியலை தயாரிக்கும் செயல்பாட்டில், வாக்குச்சாவடி நிலை அதிகாரிகள் கள ஆய்வு மேற்கொண்டு, வீடு வீடாகச் சென்று சரிபார்ப்புகளைச் செய்கின்றனர். இதனுடன், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த சுமார் 20 லட்சம் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் இந்த வாக்காளர் பட்டியல் தயாரிப்புச் செயல்மு றையை மிக நெருக்கமாக இருந்து கண்காணிக்கின்ற னர். இவர்கள் பெயரளவில் மட்டும் நியமிக்கப்பட வில்லை; இந்த முழுச் செயல்முறையி லும் ஒரு தணிக்கையா ளரைப்போல முக்கியப் பங்காற்றுகின்ற னர்.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நிலையில், 'இல்லாதவர்கள், இடம்பெயர்ந்தவர்கள், இறந்தவர்கள், ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பெயர் இருப்பவர்கள் குறித்த பட்டியல், அரசியல் கட்சிகளுக்கும், அவர்களின் வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் அவர்கள் தங்கள் தரப்பிலிருந்து தகவல்களைச் சரிபார்க்க முடியும். இதே தகவல்கள் பொதுவெளியிலும் கிடைக்கின்றன.

தகுதியுள்ள எந்தவொரு வாக்காளரும், வரைவுப் பட்டியலில் உள்ள பதிவுகள் குறித்து, கோரிக்கைகளையோ அல்லது ஆட்சேபனைகளையோ தெரிவிக்கலாம். இத்தகைய அனைத்துச் செயல்முறை களும் முடிந்த பின்னரே, இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுகிறது. இதோடு அனைத்தும் முடிந்துவிடுவதில்லை; தேர்தல் பதிவு அதிகாரியின் முடிவுக்கு எதிராக மேல்முறையீடு



செய்வதற்கான வாய்ப்பும் உள்ளது.

வாக்காளர் பட்டியலில் இருந்து யாருடைய பெய ரையும் தன்னிச்சையாக நீக்க முடியாது. வாக்காளர் பட்டியலிலிருந்து ஒரு பெயர் நீக்கப்படுவது, சட்டப்படி வரையறு க்கப்பட்ட நடைமுறைகளி ன்படியே நடைபெறுகிறது. வாக்காளர் பதிவு அதிகாரி, தமக்குக் கிடைக்கும் ஆவணங்கள், சரிபார்ப்பு முடிவுகள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் மட்டுமே ஒரு முடிவை எடுக்க வேண்டும்.

வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் செயல்பாட்டில், ஒருபுறம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் களப்பணியின் மூலம் சரிபார்ப்புகளை மேற்கொள்கின்றனர்; மறுபுறம், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த சுமார் 20 லட்சம் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் தொடர்ந்து கண்காணிப்பில் ஈடுபடுகின்றனர். இவை தவிர, கோரிக்கைகள், ஆட்சேபனைகள் மற்றும் மேல்முறையீடுகளுக்கான முறையான வழிமுறைகளும் உள்ளன.

இப்போது சிந்தித்துப் பாருங்கள். இவ்வளவு விரிவான சரிபார்ப்பு, தொடர் கண்காணிப்பு முறைகள் இருக்கும்போது, 'வாக்குத் திருட்டு' எப்படி நடக்க முடியும்? வாக்குப்பதிவு நாளன்றும் வேட்பாளர்களின் அரசியல் கட்சிகளின் முகவர்கள் கண்காணிப்பில் ஈடுபடுகின்றனர். வேட்பாளர்களின் வாக்குச்சாவடி முகவர்கள், வாக்குச்சாவடிகளில் நேரில் இருந்து, வாக்குப்பதிவு நடைமுறையைக் கண்காணிக்கின்றனர்.

மூன்று தேர்தல் ஆணையர்களின் ஒருமித்த உடன்பாட்டுடன் எஸ்ஐஆர் மேற்கொள்ளப்பட்டது. அனைத்து வாக்குச்சா வடிகளிலும் இணையவழி நேரலை வசதி செய்யப்பட்டுள்ளது. இது வாக்குப்பதிவுச் செயல்பாட்டை அதிக வெளிப்படைத்தன்மை கொண்டதாக மாற்றுகிறது.

பிஹார், மேற்கு வங்கத்தில், சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்திலேயே மிக அதிக அளவிலான வாக்குப்பதிவு சதவீதம் பதிவானது; முன்னெப்போ தும் இல்லாத வகையில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் வாக்களித்தனர். வாக்கு எண்ணிக்கையி ன்போதும் வேட்பா ளர்களின் பிரதிநிதிகள் உடன் இருக்கின்றனர். வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடத்தில், வேட்பாளர்களின் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் நேரில் இருந்து, அந்தச் செயல்பாட்டைக் கண்காணிக்கின்றனர்.

சுருக்கமாகச் சொன்னால், வாக்காளர் பட்டியல் தயாரிப்பு, சரிபார்ப்பு, கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள், இறுதி வாக்காளர் பட்டியல், வாக்குப்பதிவு, வாக்கு எண்ணிக்கை என ஒவ்வொரு முக்கியமான நிலையிலும், அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள் உடன் இருந்து கண்காணிப்பை மேற்கொள்கின்றனர்.

எளிமையாகச் சொன்னால், வாக்காளர் பட்டியல் தயாரிப்பது என்பது ஏதோ ஒரு மூடிய அறைக்குள் நடக்கும் ரகசியச் செயல் அல்ல. இதில், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் களப்பணிச் சரிபார்ப்பும், சுமார் 20 லட்சம் அரசியல் கட்சி முகவர்களின் தொடர் கண்காணிப்பும் உள்ளன; ஒவ்வொரு நிலையிலும் முறையான பாதுகாப்பு அம்சங்கள் உள்ளன.

இந்திய தேர்தல் முறை, உலகின் மிகப்பெரிய, மிக விரிவாகக் கண்காணி க்கப்படும் ஜனநாயகச் செயல்பா டுகளில் ஒன்றாகும். இதைப் புரிந்துகொள்ள, ஏதோ ஒரு தரப்பு முன்வைக்கும் பிம்பத்தை மட்டும் பார்க்காமல், ஒட்டுமொத்த தேர்தல் நடைமுறையையும் முழுமையாகப் பார்க்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

9 மாவட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு சிறப்பு அதிகாரிகள் நியமனம்: தமிழக அரசு உத்தரவு

தமிழகத்தில் 28 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி அமைப்புக ளுக்கு சிறப்பு அதிகா ரிகளின் பதவிக்காலத்தை மேலும் 6 மாதங்களுக்கு நீடித்து தமிழக அரசு உத்தரவி ட்டுள்ளது. மேலும், தென்காசி, திருநெல்வேலி உட்பட 9 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக்காலம் முடிவடை ந்ததால் அவற்றுக்கும் சிறப்பு அதிகாரிகளை நியமித்து அரசாணை வெளியிடப்ப ட்டுள்ளது.

தமிழகத்தில் 28 மாவட்டங்களில் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவிக்காலம் கடந்த 2025–ம் ஆண்டு ஜனவரி மாதம் 5–ம் தேதியுடன் முடிவடை ந்தது. இதையடுத்து, ஊரக உள்ளாட்சி அமைப்புகளை நிர்வகிப்பதற்காக 6 மாத காலத்துக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளை சிறப்பு அதிகாரிகளாக நியமித்து தமிழக அரசு ஆணையிட்டது.

அதன்படி, கிராம ஊராட்சிகளின் சிறப்பு அதிகாரிகளாக அந்தந்த ஒன்றியங்களின் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி ஒன்றியங்களு க்கான சிறப்பு அதிகாரி களாக அந்தந்த மாவட்டங்களின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைச் சேர்ந்த உதவி இயக்குநர்கள், மாவட்ட ஊராட்சிகளுக்கான சிறப்பு அதிகாரிகளாக அந்தந்த மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வடதல் இயக்குநர், கூடுதல் ஆட்சியர், இணை இயக்குநர், திட்ட இயக்குநர் ஆகியோர் நியமிக்கப்ப ட்டனர்.



இந்த 28 மாவட்டங்களிலும் சிறப்பு அ தி கா ரி களி ன் பதவிக்காலம் முடிவடைந்த ஒவ்வொரு 6 மாத காலத்துக்கு பின்னரும் அடுத்தடுத்து பதவிக்கா லத்தை நீட்டித்து தமிழக அரசு ஊத்தரவிட்டு வந்தது. இந்நிலையில், 28 மாவட்டங்களில் உள்ள கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் சிறப்பு அ தி கா ரி களி ன் பதவிக்காலம் அக்.19ம் தேதி (நேற்று) முடிவடை ந்தது. இதையடுத்து, இந்த 28 மாவட்டங்களில் சிறப்பு அதிகாரிகளின் பதவிக் காலத்தை 2027–ம் ஆண்டு ஏப்ரல் 19–ம் தேதி வரை நீட்டித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை, தி ரு ப் ப த் தூ ர், திருநெல்வேலி, தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் தேர்ந்தெடு க்கப்பட்ட ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிக ளின் பதவிக் காலமும் அக்.19–ம் தேதி அன்று (நேற்று) முடிவ டைந்தது.

இதையடுத்து, இந்த 9 மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளை நிர்வகிப்பத ற்காக 6 மாத காலத்துக்கு (2027–ம் ஆண்டு ஏப்ரல் 19–ம் தேதி வரை) நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதில், புதிதாக உருவாக்கப்பட்ட 9 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 93 கிராம ஊராட்சிகள் இதில் அடங்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தந்தவட்டாரங்களின் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அந்தந்த கிராம ஊராட்சிக ளுக்கா ன சிறப்பு அதிகா ரிகளாக நியமிக்கப்ப டுகிறார்கள். அந்தந்த மாவட்டங்களின் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் உதவி இயக்குநர் (ஊராட்சிகள் மற்றும் தணிக்கை) சிறப்பு அதிகாரி களாக நியமிக்கப்ப டுகிறார்கள். அந்தந்த மாவட்டங்களின் மாவட்ட ஊராட்சிகளுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை களின் கூடுதல் இயக்குநர், கூடுதல் ஆட்சியர், இணை இயக்குநர், திட்ட இயக்குநர் சிறப்பு அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள் என தமிழக அரசு வெ ளி யி ட் டு ள் ள அ ர சா ணை யி ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் கனமழை; இடி தாக்கி இயேசு சிலை சேதம்

தூத்துக்குடி மாநகரில் பெய்த பலத்த இடியுடன் கூடிய மழையின்போது, சின்னக்கோவில் கோபுரத்தின் மீது இருந்த இயேசுவின் சிலை இடி தாக்கிச் சேதமடைந்தது.

இடி, மின்னலுடன் கனமழை

தூத்துக்குடி மாநகரில் இன்று மாலை திடீரென பயங்கர இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்தது. அப்போது நகரின் பல பகுதிகளில் பலத்த இடி சத்தம் கேட்டது. இந்த நிலையில், தூத்துக்குடியின் புகழ்பெற்ற சின்னக்கோவில் என்று அழைக்கப்படும் மேற்றாசன ஆலயமான தூய இருதய ஆண்டவர் ஆலய கோபுரத்தின் உச்சியில் அமைக்கப்பட்டிருந்த இயேசுவின் சுரூபத்தின் மீது திடீரென பயங்கரப் பேரிடி தாக்கியது.

இயேசு சிலையின் இடது கரம் சேதம்

இதில் அந்த இயேசுவின் உருவச் சிலையின் இடது கரம் சேதமடைந்தது. நகரின் நடுப்பகுதியில் அமைந்துள்ள இந்த கோவிலின் கோபுரத்தில் இடி தாக்கியபோதும், வேறு எந்தவித உயிரிழப்போ அல்லது பெரும் சேதமோ ஏற்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளது.

இயேசுவுக்கு மக்கள் நன்றி

இடி தாக்கிய உச்சிப் பகுதி சேதமடைந்தாலும், பெரிய பேராபத்துகளில் இருந்தும் பேரிடரிலிருந்தும் தூத்துக்குடி மக்களை இயேசுவின் திரு இருதயம் அற்புதமாகக் காப்பாற்றியுள்ளதாகக் கருதி, கிறிஸ்தவ மக்கள் தேவாலயங்களிலும் வீடுகளிலும் இயேசுவிற்கு தங்களது கோடான கோடி நன்றிகளைத் தெரிவித்து உருக்கமான பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 10 காசுகள் உயர்வு

நாமக்கல்மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 10 காசுகள் உயர்த்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து தேசிய முட்டை ஒருங்கி ணைப்புக் குழு வெளியி ட் டு ள் ள செ ய் தி க் கு றி ப் பி ல் தெரிவித்துள்ளதாவது:

நாமக்கல்மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை இன்று 10 காசுகள் உயர்ந்து, ஒரு முட்டையின் விலை ரூ.5.60 ஆக நிர்ணயம் செய்யப்பட்டு ள்ளது.



இதனை தொடர்ந்து, முக்கிய நகரங்களில் முட்டை விலை விபரம் பி ன்வருமாறுமாற்றியமைக் கப்பட்டுள்ளது:

- நாமக்கல்: ரூ. 5.60
- சென்னை: ரூ. 6.15

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில்லறை விற்பனை முட்டை கொள்முதல் விலை உயர்ந்துள்ளதால், சில்லறை விற்பனைய கங்களிலும் முட்டை விலை மேலும் உயரக்கூ டும் என எதிர்பார்க்க ப்படுகிறது.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: G.RAJA